www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 3

## (பொது அறிவு)

1. தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் அணு கடிகாரத்தில் ஒரு வினாடி என்பது எந்த அணுவில் ஆற்றல் மாற்றத்திற்கான கால இடைவெளி என்று கணக்கிடப்படுகிறது?
   அ) கார்பன் ஆ) ரேடியம்
   இ) சீசியம் ஈ) யுரேனியம்

2. அழுத்தத்தின் அலகு
   அ) நியூட்டன்/மீட்டர் ஆ) நியூட்டன்/மீட்டர்$^2$
   இ) நியூட்டன் ஈ) நியூட்டன்/மீட்டர்$^3$

3. பழங்காலத்தில் 'அல்கெமி' (Alchemy) என்பது
   அ) தங்கத்தை இரும்பாக மாற்றும் கலை
   ஆ) இரும்பைத் தங்கமாக மாற்றும் கலை
   இ) தாமிரத்தைத் தங்கமாக மாற்றும் கலை
   ஈ) தங்கத்தைத் தாமிரமாக மாற்றும் கலை

4. கடின நீரினை மென்னீராக்கப் பயன்படுவது
   அ) சோடியம் கார்பனேட் ஆ) சோடியம் ஹைட்ராக்ஸைடு
   இ) சோடியம் குளோரைடு ஈ) சோடியம் குளோரேட்

5. மியூரியாட்டிக் அமிலம் என்று அழைக்கப்படும் அமிலம்
   அ) ஹைட்ரோ குளோரிக் அமிலம்
   ஆ) நைட்ரிக் அமிலம்
   இ) கந்தக அமிலம்
   ஈ) நைட்ரஸ் அமிலம்

6. உறை கலவையின் வெப்பநிலை
   அ) $23^0C$ ஆ) $-23^0C$
   இ) $0^0C$ ஈ) $273^0C$

7. ஒளிக்கதிர் ஒன்று சமதளத்தில் எதிரொளிப்பு அடையும்போது படுகோணத்தின் மதிப்பு $40^0C$ எனில், மீள் கோணத்தின் மதிப்பு எவ்வளவு?
   அ) $50^0C$ ஆ) $140^0C$
   இ) $40^0C$ ஈ) $20^0C$

8. பூமியிலிருந்து சூரியனின் தொலைவு
   அ) $1.496 \times 10^8$ கி.மீ ஆ) $1.49 \times 10^6$ கி.மீ
   இ) $1.496 \times 10^{12}$ கி.மீ ஈ) $1.296 \times 10^8$ கி.மீ

9. ஒரு கணுவிற்கும் அடுத்த எதிர்க்கணுவிற்கும் இடையேயுள்ள தொலைவு
   அ) $\lambda$ ஆ) $\lambda/2$
   இ) $\lambda/4$ ஈ) $\lambda/8$

10. நீராவி எஞ்சினை முதன் முதலில் கண்டறிந்தவர்
    அ) ஜேம்ஸ் வாட் ஆ) கிளாசியஸ்
    இ) போல்ட்ஸ் மேன் ஈ) தாமஸ் நியூ கமன்

11. கால்வனா மீட்டரை அம்மீட்டராக மாற்றுவது எப்படி?
    அ) உயர்ந்த மின்தடை ஒன்றை பக்க இணைப்பில் இணைப்பது
    ஆ) குறைந்த மின்தடை ஒன்றை பக்க இணைப்பில் இணைப்பது
    இ) உயர்ந்த மின்சுமை ஒன்றை பக்க இணைப்பில் இணைப்பது
    ஈ) குறைந்த மின்சுமை ஒன்றை பக்க இணைப்பில் இணைப்பது

12. கதிரியக்கத் தன்மை கொண்ட ஹாலஜன்
    அ) ஃப்ளுரின் ஆ) அயோடின்
    இ) அஸ்டாடைன் ஈ) ரேடியம்

13. கீழ்க்கண்டவற்றில் எந்த வகை நிலக்கரியில் கார்பனின் சதவிகிதம் அதிகமாக உள்ளது?
    அ) பீட் ஆ) லிக்னைட்
    இ) பிட்டுமினஸ் ஈ) ஆந்த்ரசைட்

14. ஒலிஃபீன்கள் என்று அழைக்கப்படும் நிறைவுறா ஹைட்ரோ கார்பன்கள்
    அ) அல்கேன்கள் ஆ) அல்கீன்கள்
    இ) அல்கைன்கள் ஈ) பாரஃபின்கள்

15. கரிமச் சேர்மங்களைப் பற்றி விளக்க இன்றியமையா விசைக் கொள்கையை வெளியிட்டவர்
    அ) போலர் ஆ) லவாய்சியர்
    இ) பெரிசிலியஸ் ஈ) கோல்ப்

16. கீட்டோன்களின் பொது வாய்ப்பாடு
    அ) $R\text{-}\underset{\underset{\displaystyle O}{||}}{C}\text{-}R^1$ ஆ) $R\text{-}O\text{-}R^1$
    இ) $R\text{-}COO\text{-}R^1$ ஈ) $R\text{-}NH_2$

17. தொட்டால் சுருங்கி (Touch-me-not) தாவரத்தின் தாவரவியல் பெயர்
    அ) டெஸ்மோடியம் ஜிரான்ஸ் ஆ) மைமோஸா ப்யூடிகா
    இ) அல்லியம் சட்டைவம் ஈ) அக்கேஸியா அராபிக்கா

18. பவளப் பாறைகளை உருவாக்கும் விலங்குகள் எந்த தொகுதியில் காணப்படுகிறது?
    அ) தட்டைப்புழுவினம் ஆ) துளையுடலிகள்
    இ) முட்தோலிகள் ஈ) குழியுடலிகள்

19. ஆணிவேரின் மாற்றுருவான நேஃபிபார்மிற்கு எடுத்துக்காட்டு
    அ) முள்ளங்கி ஆ) கேரட்
    இ) பீட்ரூட் ஈ) உருளை

20. 1 மைக்ரான் என்பது
    அ) 1/100 மி.மீ ஆ) 1/1000 மி.மீ
    இ) 1/1000 செ.மீ ஈ) 1/100 நேனோ மீட்டர்

21. வேதிப்பொருட்களைக் கொண்டு திடீர் மாற்றத்தைத் தூண்ட முடியும் என்று முதன்முதலில் கண்டறிந்தவர்
    அ) ஹியூகோ டீவ்ரிஸ் ஆ) டாப்சான்ஸ்கி
    இ) C. ஆயர்பாக் ஈ) மார்கன்

22. குரங்கில் உள்ள மொத்த குரோமோசோம்களின் எண்ணிக்கை
    அ) 48 ஆ) 46
    இ) 44 ஈ) 40

23. முதல் சோதனைக் குழாய் குழந்தை உருவாக்கப்பட்ட ஆண்டு
    அ) 1975 ஆ) 1978
    இ) 1980 ஈ) 1984

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

24. கீழ்க்கண்டவற்றில் பசுமையக வாயு அல்லாதது எது?
அ) $CO_2$ ஆ) $CH_4$
இ) $N_2O$ ஈ) $O_2$

25. 'பசுமைப் புரட்சி' என்னும் சொல்லை அறிமுகப்படுத்தியவர்
அ) வில்லியம் எஸ். காட் ஆ) நார்மன் போர்லாக்
இ) எம்.எஸ். சுவாமிநாதன் ஈ) சி. சுப்ரமணியம்

26. யானைக்கால் வியாதிக்குக் காரணமான ஒட்டுண்ணி
அ) பிளாஸ்மோடியம் ஆ) என்செபாலிடிஸ்
இ) விப்ரியோ காலரே ஈ) ஊச்சரியா பாங்கராப்டி

27. செல்லின் ஆற்றல் நிலையமான மைட்டோகாண்டிரியாவில் பல மடிப்புகளை உட்புறமாகக் கொண்ட உள் உறையின் பெயர்
அ) கிறிஸ்டே ஆ) கிரானா
இ) சிஸ்டர்னே ஈ) பிளாஸ்டிட்

28. AIDS நோய் இருப்பதை உறுதி செய்வதற்கான சோதனை
அ) எலிசா சோதனை ஆ) வெஸ்டர்ன் பிளாட் சோதனை
இ) ஜிடிடி சோதனை ஈ) ஹெபாடிடிஸ் சோதனை

29. பாஸ்பேட்டைக் கரைக்கும் பாக்டீரியாவிற்கு எடுத்துக்காட்டு
அ) ஆஸில்லடோரியா ஆ) குளோமஸ்
இ) பேசில்லஸ் சர்குலண்ட்ஸ் ஈ) அனபீனா

30. மாலத்தியான் என்பது ஒரு
அ) களைக் கொல்லி ஆ) பூஞ்சைக் கொல்லி
இ) எலிக் கொல்லி ஈ) பூச்சிக் கொல்லி

31. 'திராவிட வேதம்' என்று அழைக்கப்படும் நூல்
அ) திருப்பாவை ஆ) திருவெம்பாவை
இ) திருக்குறள் ஈ) திருவாய்மொழி

32. 'புதியதோர் உலகம் செய்வோம்' என்று கூறியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்

33. 'மெட்ராஸ் பிரசிடென்சி' தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட நாள்
அ) ஜனவரி 14 ஆ) பிப்ரவரி 14
இ) மார்ச் 14 ஈ) ஏப்ரல் 14

34. பைகாரா மற்றும் குந்தா நீர் மின் நிலையங்கள் உள்ள மாநிலம்
அ) கேரளா ஆ) கர்நாடகா
இ) ஆந்திரப்பிரதேசம் ஈ) தமிழ்நாடு

35. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தமிழகத் தலைவர்
அ) ராஜாஜி ஆ) விஜயராகவாச்சாரியார்
இ) காமராஜர் ஈ) சத்தியமூர்த்தி

36. சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தின் மொத்த நீளம்
அ) 250 கி.மீ ஆ) 300 கி.மீ
இ) 200 கி.மீ ஈ) 167 கி.மீ

37. ATM என்பதன் விரிவாக்கம்
அ) Automated Teller Machine
ஆ) Automatic Telling Machine
இ) Automatic Teller Machine
ஈ) Automated Telling Machine

38. கர்ண பூஷணம் என்பது எதனைக் குறிக்கும்?
அ) மொட்டை அடித்தல்
ஆ) குட முழுக்கு
இ) காது குத்துதல்
ஈ) தெய்வ வழிபாடு

39. 'வராகவதாரம்' என்பதில் வராகம் என்பது எதனைக் குறிக்கும்?
அ) குதிரை ஆ) ஆமை
இ) பன்றி ஈ) மீன்

40. 'நாடுகளின் செல்வத்தைப் பற்றிய ஆய்வைவிட நாடுகளின் வறுமையைப் பற்றிய ஆய்வு மிக்க அவசரமானது' என்று கூறியவர்
அ) பால்டுவின் ஆ) மேயர் மற்றும் பால்டுவின்
இ) ராபர்ட் மால்தஸ் ஈ) கீன்ஸ்

41. இரட்டைப் பொருளாதாரத்தில் அங்காடிப் பிரிவு சார்ந்த துறை
அ) தொழில் துறை ஆ) வேளாண் துறை
இ) சுரங்கத் துறை ஈ) தொழில் துறை சாரா இதர துறைகள்

42. மூலதனம் (Das Capital) என்னும் நூலின் ஆசிரியர்
அ) ரூஸோ ஆ) வால்டேர்
இ) மால்தஸ் ஈ) கார்ல் மார்க்ஸ்

43. இணைப் பொருளாதாரம் என்று அழைக்கப்படுவது
அ) கருப்புப் பணப் புழக்கம் ஆ) திட்டமிட்ட பொருளாதாரம்
இ) கலப்புப் பொருளாதாரம் ஈ) முதலாளித்துவ பொருளாதாரம்

44. உலக அளவில் பொருளாதாரத் திட்டமிடலை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா
இ) சோவியத் ரஷ்யா ஈ) இந்தியா

45. குறுகிய பணம் (Narrow Money) எனப்படுவது
அ) $M_1$ ஆ) $M_2$
இ) $L_1$ ஈ) $L_2$

46. ஒரு சதுரங்கப் பலகையில் (Chess board) உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை
அ) 124 ஆ) 64
இ) 16 ஈ) 24

47. 5 எண்களின் சராசரி 5.4 எனில், அந்த 5 எண்களின் கூட்டுத் தொகை
அ) 28 ஆ) 26
இ) 27 ஈ) கணக்கிட இயலாது

48. 60 x X = 30% 1,000 எனில், xன் மதிப்பு என்ன?
அ) 4 ஆ) 5
இ) 6 ஈ) 7

49. ஒரு புகைவண்டியின் நீளம் 120 மீ. அது 180 மீ நீளமுள்ள பாலத்தை 5 வினாடிகளில் கடக்கின்றது எனில், அதன் வேகம் என்ன?
அ) 60மீ/வி ஆ) 50மீ/வி
இ) 70மீ/வி ஈ) 45மீ/வி


50. ஓர் அரை வட்டத்தின் ஆரம் 21 செ.மீ எனில், அரை வட்டத்தின் பரப்பு என்ன?
அ) 108 செ.மீ$^2$ ஆ) 140 செ.மீ$^2$
இ) 210 செ.மீ$^2$ ஈ) 693 செ.மீ$^2$

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

51. $\log_2^{32}$ன் மதிப்பீடு காண்க
அ) 16 ஆ) 5
இ) 4 ஈ) 8

52. $\chi$ ஐ மையமாகக் கொண்ட வட்டத்தின் பரப்பு 81 $\pi$ செ.மீ$^2$. எனில், PQRSன் பரப்பு என்ன?




அ) 124 ச.செ.மீ ஆ) 264 ச.செ.மீ
இ) 314 ச.செ.மீ ஈ) 324 ச.செ.மீ

53. கீழ்க்காணும் எண்களில் தலைகீழ் இல்லாத எண் எது?
அ) 0 ஆ) 1
இ) ⅓ ஈ) -1

54. A (4,-7) B (-1,5) ஆகிய இரு புள்ளிகளுக்கு இடையே உள்ள தொலைவு
அ) 12 ஆ) 13
இ) 14 ஈ) 15

55. தமிழ்நாட்டில் உள்ள ராஜ்ய சபா உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை
அ) 235 ஆ) 16
இ) 217 ஈ) 18

56. மாநகரத்தின் முதற்குடிமகன்
அ) மாநில முதல்வர் ஆ) மேயர்
இ) மாவட்ட ஆட்சியர் ஈ) வருவாய் கோட்டாட்சியர்

57. தமிழகத்தில் சட்ட மேலவையைக் களைத்த தமிழக முதல்வர்
அ) எம்.ஜி.ஆர். ஆ) கருணாநிதி
இ) ஜெயலலிதா ஈ) ஓ.பன்னீர் செல்வம்

58. 'ஜனசங்கம்' கட்சியைத் தோற்றுவித்தவர்
அ) அடல் பிஹாரி வாஜ்பாயி ஆ) ராஜேந்திர பிரசாத்
இ) ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ஈ) கேசவ் ஹெட் கேவார்

59. அரசியல் கட்சி இல்லாத மக்களாட்சி மாலுமி இல்லாத கப்பல், துடுப்பு இல்லாத படகு போன்றது எனக் கூறியவர்
அ) கில்கிரைஸ்ட் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) ஜெண்டல் ஈ) எர்னஸ்ட் பாக்கர்

60. பிற்படுத்தப்பட்டோர் குறித்து ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு
அ) சர்க்காரியா குழு ஆ) சச்சார் குழு
இ) ராஜ மன்னார் குழு ஈ) மண்டல் குழு

61. உச்ச நீதிமன்ற நீதிபதியின் ஓய்வு பெறும் வயது
அ) 65 ஆ) 62
இ) 60 ஈ) 64

62. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' எனக்கூறும் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு
அ) சட்டப்பிரிவு 14 ஆ) சட்டப்பிரிவு 17
இ) சட்டப்பிரிவு 19 ஈ) சட்டப்பிரிவு 21

63. தமிழகத்தின் கூடங்குளம் அணுமின் நிலையம் எந்த நாட்டின் உதவியோடு அமைக்கப்பட்டது?
அ) ஜெர்மனி ஆ) ஃபிரான்ஸ்
இ) ரஷ்யா ஈ) அமெரிக்கா

64. இந்தியாவின் மொத்தப் பரப்பளவில் தமிழகத்தின் பரப்பு
அ) 22% ஆ) 4%
இ) 7% ஈ) 13%

65. மினிகாய் தீவுகள் அமைந்துள்ள இடம்
அ) அந்தமான் தீவுகள் ஆ) நிக்கோபார் தீவுகள்
இ) பாரன் தீவுகள் ஈ) லட்சத் தீவுகள்

66. இந்தியாவின் சிவப்பு ஆறு என்று அழைக்கப்படும் நதி
அ) சிந்து ஆ) கங்கை
இ) பிரம்மபுத்திரா ஈ) கோதாவரி

67. உலகில் பெரிய பவள அரண் தொடர்கள் எங்குள்ளன?
அ) ஆஸ்திரேலியா ஆ) நியூசிலாந்து
இ) கியூபா ஈ) பெரு

68. இந்தியாவில் சூரிய உதயத்தை முதலில் காணும் மாநிலம்
அ) குஜராத் ஆ) அருணாச்சலப் பிரதேசம்
இ) அஸ்ஸாம் ஈ) திரிபுரா

69. இந்தியாவின் மிக உயர்ந்த சிகரம்
அ) நந்தா தேவி ஆ) கஞ்சன் ஜங்கா
இ) கே.2 ஈ) எவரெஸ்ட்

70. அழுத்தச் சரிவு அதிகமாக இருந்தால் காற்றின் வேகம்
அ) குறையும் ஆ) மாறாது
இ) அதிகரிக்கும் ஈ) குறைந்து பின் அதிகரிக்கும்

71. முதலாம் சந்திரகுப்தரின் சாதனைகளைக் குறிப்பிடும் கல்வெட்டு
அ) மெஹ்ருளி கல்வெட்டு ஆ) அலகாபாத் தூண் கல்வெட்டு
இ) உத்திரமேரூர் கல்வெட்டு ஈ) அதிரும்பா கல்வெட்டு

72. வெண்ணிப் போரில் பெரு வெற்றி பெற்ற மன்னன்
அ) கரிகாற் சோழன் ஆ) ராஜராஜ சோழன்
இ) ராஜேந்திர சோழன் ஈ) குலோத்துங்க சோழன்

73. இந்தியாவிற்கு எதிராகப் படையெடுத்த முதல் படையெடுப்பாளர்
அ) அலெக்சாண்டர் ஆ) முதலாம் டேரியஸ்
இ) மகா சைரஸ் ஈ) பிலிப்

74. முதல் சமண சமய மாநாடு நடைபெற்ற இடம்
அ) வாலாபி ஆ) பாடலிபுத்திரம்
இ) வைசாலி ஈ) காஷ்மீர்

75. காட்டு இலக்கியம் எனப்படுவது
அ) உபநிடதங்கள் ஆ) பிராமணங்கள்
இ) சம்ஹிதைகள் ஈ) ஆரண்யகங்கள்

76. புதிய கற்காலப் பொருட்கள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இடம்
அ) உத்திரமேரூர் ஆ) மாமல்லபுரம்
இ) பையம்பள்ளி ஈ) சித்தன்னவாசல்

77. இந்திய தேசிய காங்கிரசில் தீவிரவாதிகளும், மிதவாதிகளும் இணைந்த மாநாடு

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

அ) லக்னோ மாநாடு ஆ) சூரத் மாநாடு
இ) அலகபாத் மாநாடு ஈ) பம்பாய் மாநாடு

78. போர்ச்சுக்கீசிய பகுதிகளான கோவா, டையு, டாமன் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட ஆண்டு
அ) 1956 ஆ) 1947
இ) 1961 ஈ) 1962

79. மாமண்டூர் ஏரியை வெட்டிய அரசன்
அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) முதலாம் நரசிம்ம வர்மன்
இ) ராஜராஜ சோழன் ஈ) ராஜேந்திர சோழன்

80. சக ஆண்டு எனப்படுவது
அ) கி.பி.76 ஆ) கி.மு.76
இ) கி.பி.78 ஈ) கி.மு.56

81. ராசக்கர் இயக்கத்தினைத் தோற்றுவித்தவர்
அ) காசிம் ராஸ்வி ஆ) கான் அப்துல் கபார் கான்
இ) சலிமுல்லா ஈ) வினோபா பாவே

82. 'கேசரி' என்ற பத்திரிகையின் ஆசிரியர்
அ) வல்லபாய் படேல் ஆ) பாலகங்காதர திலகர்
இ) ஜவஹர்லால் நேரு ஈ) பிபின் சந்திரபால்

83. 'மூல் சங்கர்' என்று அழைக்கப்பட்டவர்
அ) ராஜாராம் மோகன்ராய் ஆ) கேசவ சந்திர சென்
இ) சுவாமி தயானந்த சரஸ்வதி ஈ) ராமகிருஷ்ண பரமஹம்சர்

84. இந்தியாவின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர்
அ) கோனேரு ஹம்பி ஆ) சானியா மிர்ஸா
இ) ஜோஷ்னா சின்னப்பா ஈ) விஜயலஷ்மி

85. 2000ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற இடம்
அ) சிட்னி ஆ) அட்லாண்டா
இ) ஏதென்ஸ் ஈ) பீகிங்

86. 'அஜாத சத்ரு' என்று அழைக்கப்பட்ட இந்திய அரசியல் தலைவர்
அ) சர்தார் படேல் ஆ) பைரோன்சிங் ஷெகாவத்
இ) ஏ.பி.வாஜ்பாய் ஈ) ஜவஹர்லால் நேரு

87. சட்டப்பேரவையில் போட்டியிடாத ஒருவர் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் 6 மாதங்களுக்குள் ஏதாவது ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று கூறும் அரசியலமைப்புச் சட்ட விதி
அ) சட்டப்பிரிவு 163 ஆ) சட்டப்பிரிவு 164
இ) சட்டப்பிரிவு 164 (4) ஈ) சட்டப்பிரிவு 164 (1)

88. தமிழகத்தின் விஸ்வநாதன் ஆனந்த் 'செஸ் ஆஸ்கர்' என்னும் உலக சாம்பியன் ஷிப் விருதை எத்தனை முறை வென்றுள்ளார்?
அ) 5 ஆ) 4
இ) 3 ஈ) 1

89. இந்தியா-அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு
அ) 2005 ஆ) 2006
இ) 2007 ஈ) 2008

90. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ₹2,300 கோடி செலவில் தமிழகத்தில் சமீபத்தில் எங்கு தொடங்கப்பட்டது?
அ) ஸ்ரீபெரும்புதூர் ஆ) மீஞ்சூர்
இ) காட்டுப்பள்ளி ஈ) மதுராந்தகம்

91. 'சாகர் மாதா' என்று அழைக்கப்படும் சிகரம்
அ) எவரெஸ்ட் ஆ) கஞ்சன் ஜங்கா
இ) K2 ஈ) நங்க பர்வதம்

92. 'பிதார் கனிகா' மாங்குரோவ் காடுகள் காணப்படும் இந்திய மாநிலம்
அ) மேற்கு வங்காளம் ஆ) ஒரிஸ்ஸா
இ) குஜராத் ஈ) மகாராஷ்டிரம்

93. உலக வெப்பநிலையைக் கட்டுப்படுத்த 2009ஆம் ஆண்டு கடலுக்கடியில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திய நாடு
அ) மாலத்தீவு ஆ) கென்யா
இ) சிங்கப்பூர் ஈ) ஸ்வீடன்

94. அமெரிக்காவின் 43ஆவது அதிபராகப் பொறுப்பேற்றவர்
அ) பாரக் ஒபாமா ஆ) பில் கிளிண்டன்
இ) ஜார்ஜ் W.புஷ் ஈ) ஜான் கென்னடி

95. இந்தியாவின் 17ஆவது தலைமைத் தேர்தல் அதிகாரியாக சமீபத்தில் பொறுப்பேற்றவர்
அ) நவீன் சாவ்லா ஆ) கோபால்சுவாமி
இ) எம்.கே.நாராயணன் ஈ) S.Y.குரேஷி

96. இந்தியா டிவைடட் (India Divided) என்ற நூலின் ஆசிரியர்
அ) மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ஆ) ராஜேந்திர பிரசாத்
இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) சசி தரூர்

97. லட்சத் தீவுகள், யூனியன் பிரதேசத்தின் தலைநகரம்
அ) கவராத்தி ஆ) போர்ட் பிளேர்
இ) டாமன் ஈ) சில்வஸ்ஸா

98. உலகின் அதிக மக்களால் பேசப்படும் மொழி
அ) மாண்டரின் ஆ) ஆங்கிலம்
இ) ஸ்பானிஷ் ஈ) ஹிந்தி

99. 'தேசபந்து' என்ற புனைப்பெயரால் அறியப்படும் தேசியத் தலைவர்
அ) C.F.ஆண்ட்ரூஸ் ஆ) ஷேக் முஜிபுர் ரஹ்மான்
இ) சித்தரஞ்சன் தாஸ் ஈ) ஜவஹர்லால் நேரு

100. இந்திய ஒலிம்பிக் சங்கம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1940 ஆ) 1947
இ) 1935 ஈ) 1924

## விடைகள் :

1.இ), 2.ஆ), 3.ஆ), 4.அ), 5.அ), 6.ஆ), 7.இ), 8.அ), 9.இ), 10.ஈ), 11.ஆ), 12.இ), 13.ஈ), 14.ஆ), 15.இ), 16.அ), 17.ஆ), 18.ஈ), 19.இ), 20.ஆ), 21.இ), 22.அ), 23.ஆ), 24.ஈ), 25.அ), 26.ஈ), 27.அ), 28.ஆ), 29.இ), 30.ஈ), 31.ஈ), 32.ஆ), 33.அ), 34.ஈ), 35.ஆ), 36.ஈ), 37.அ), 38.இ), 39.இ), 40.ஆ), 41.அ), 42.ஈ), 43.அ), 44.இ), 45.அ), 46.ஆ), 47.இ), 48.ஆ), 49.அ), 50.ஈ), 51.ஆ), 52.ஈ), 53.அ), 54.ஆ), 55.ஈ), 56.ஆ), 57.அ), 58.இ), 59.ஆ), 60.ஈ), 61.அ), 62.அ), 63.இ), 64.ஆ), 65.ஈ), 66.இ), 67.அ), 68.ஆ), 69.இ), 70.இ), 71.அ), 72.அ), 73.இ), 74.ஆ), 75.ஈ), 76.இ), 77.அ), 78.இ), 79.அ), 80.இ), 81.அ), 82.ஆ), 83.இ), 84.ஈ), 85.அ), 86.ஆ), 87.இ), 88.அ), 89.ஈ), 90.இ), 91.அ), 92.ஆ), 93.அ), 94.இ), 95.ஈ), 96.ஆ), 97.அ), 98.அ), 99.இ), 100.ஈ).

www.LatestWalkin.com